
தமிழ்ப் பல்கலைக்கழகச்

# செய்தி மலர்

திருவள்ளுவராண்டு 2034 ஏப்பிரல் 2003

## இலக்கியத்துறை




17-03-2003 அன்று மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் அறக்கட்டளைச் சொற்பொழிவு நடைபெற்றது. சிறந்த கவிதைகளின் பண்புகள், மேனாட்டு அறிஞரின் கருத்துக்கள் ஆகியன பற்றி விளக்கியதுடன், சிறந்த கவிதைகளின் பண்புகள் பாரதியார் பாடல்களில் இடம்பெறுவதால் அவர் என்றும் வாழும் பாரதியாகத் திகழ்கின்றமையைத் தமிழ்ப் பல்கலைக்கழக முன்னைத் துணைவேந்தர் முனைவர் ச.அகத்தியலிங்கம் அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் முன்னை இயக்குநர் முனைவர் ச.வே.சுப்பிரமணியன் அவர்கள் பாரதியின் உரைநடையில் காணப்படும் பல்வேறு புதுமைப் பண்புகள் பற்றி விளக்கினார். பாரதியார் பாடல்களில் காணப்படுகின்ற மந்திரச் சொற்கள், குறியீடுகள், கருத்துருவாக்கம், சொல்லுருவாக்கம் என்பன பற்றிப் பாரதியின் ஒலியும்-மௌனமும் என்ற தலைப்பில் பீ.மு.அபிபுல்லா அவர்கள் உரையாற்றினார்கள். பாரதியார் பாடல்களில் காணப்படுகின்ற செவ்விசைக் கூறுகளையும், நாட்டுப்புற இசைக் கூறுகளையும் விளக்கிப் பிசப் ஈபர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் அ.கோபிநாத் அவர்கள் பாரதி பாடல்களில் செவ்விசையும் நாட்டுப்புற இசையும் என்ற தலைப்பில் உரையாற்றினார்கள்.

## குருதிக் கொடை

தமிழ்ப் பல்கலைக்கழக இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் தமிழ்ப் பல்கலைக்கழக மொழிப்புலக் கருத்தரங்க அறையில் 20-03-2003 அன்று இரத்ததான முகாம் மற்றும் எயிட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்கினை நடத்தியது. இதன் தொடக்கத்தில் இந்நிகழ்ச்சியின் நோக்கம் பற்றித் தமிழ்ப் பல்கலைக்கழக இளைஞர் செஞ்சிலுவைச் சங்க ஒருங்கிணைப்பாளரும் இணைப் பேராசிரியருமாகிய முனைவர் செ.சுப்பிரமணியன் குறிப்பிட்டு அனைவரையும் வரவேற்றார்.




இக்கருத்தரங்கினைத் தொடங்கிவைத்துத் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் இ.சுந்தர மூர்த்தி அவர்கள் தலைமையுரையாற்றினார்கள். இன்றைய சூழலில் மனநலம், உடல் நலம் இரண்டுமே பாதுகாக்கப்படவேண்டும். அந்தக் காலத்தில் 3 வகையான தானங்களைக் குறிப்பிடுவர். இவை அன்னதானம், சாஸ்திரதானம், வஸ்திரதானமாகும். இவற்றில் எல்லாம் சிறந்தது இரத்ததானம் என்று இவர் குறிப்பிட்டார்.

சிறப்புரையாற்றிய தஞ்சை மருத்துவக் கல்லூரி முதல்வர் கே.கலைச்செல்வி இளைஞர்களால் எல்லாம் முடியும். இரத்ததானம் செய்து உயிர்காப்போம் என்றார். மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத் துணைத்தலைவர் சிசிலியா பாண்டியன் வாழ்த்துரை வழங்கினார். இதனைத் தொடர்ந்து டாக்டர் சி.குணசேகரன் அவர்கள் இரத்த தானம் மற்றும் எயிட்ஸ் விழிப்புணர்வு பற்றியும் மருத்துவர் சே.பிரேமா அவர்கள் எயிட்ஸ் நோயும் சித்த மருத்துவமும் என்ற தலைப்பிலும் உரையாற்றினர். 25 நபர்கள் இரத்ததானம் செய்தனர். இக்கருத்தரங்கில் தமிழ்ப் பல்கலைக்கழக மாணவர்களும், திருவையாறு அரசர் கல்லூரி சமூகவியல் மாணவர்களும், தஞ்சை மார்கிரேட் தொண்டு நிறுவனத்தாரும் கலந்து கொண்டனர். நிறைவாக முனைவர்பட்ட மாணவி திருமதி இராணி நன்றி கூறினார்.

-தமிழ்ப் பல்கலைக்கழக இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்


## தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் உலக மகளிர் தின விழா




உலக மகளிர் நாளை ஒட்டித் தமிழ்ப் பல்கலைக் கழக மகளிர் மற்றும் சமூக அறிவியல் துறை இணைந்து 24-03-2003 அன்று திங்கட்கிழமை உலக மகளிர் விழாவை நடத்தின. விழாவிற்குத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா.முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் தலைமையேற்றார்கள். கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா. முனைவர் திருமதி ஆனந்தவல்லி மகாதேவன் அவர்கள் சிறப்புரையாற்றினார்கள். வல்லம், பெரியார் நூற்றாண்டு மகளிர் தொழில்நுட்பக் கல்லூரி, பவர் தொண்டு நிறுவனச் செயலாளர் திருமதி உ.பர்வின் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். உலக மகளிர் விழாவில் பன்முக நோக்கில் மகளிர் என்னும் நூல் ஒன்று வெளியிடப்பட்டது. பல்கலைக்கழக மற்றும் பல்வேறு கல்லூரி ஆசிரியைகள் செயல்திறன் மிக்க மகளிர் குறித்து எழுதிய 63 கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இந்நூலினைச் சமூக அறிவியல் துறைத்தலைவர் பேரா.முனைவர் அரோமா கு சாம், இசைத்துறைத்தலைவர் முனைவர் இ.அங்கயற்கண்ணி, மொழியியல் துறைத்தலைவர் முனைவர் எம்.சுசீலா, அகராதியியல் துறை ஆய்வு உதவியாளர் முனைவர் மா.பார்வதி, இலக்கியத்துறை ஆய்வு உதவியாளர் முனைவர் க. திலகவதி ஆகியோர் இணைந்து பதிப்பித்துள்ளனர்.

துணைவேந்தர் அவர்கள் தமது தலைமை உரையில் மகளிர் இதழ்களை வரலாற்று நோக்கில் ஆராய்ந்து உரைநிகழ்த்தினார். மகளிர் விழிப்புணர்வு குறித்த கருத்துக்கள் பலவற்றைச் சிறப்புற எடுத்தியம்பினார்கள். சிறப்புரையாற்றிய பேரா.ஆனந்தவல்லி மகாதேவன் அவர்கள் கீழ்மட்டம் முதல் மேல்மட்டம் வரை மகளிர் ஒற்றுமையாக இருந்தால் தையும் சாதிக்கலாம் என்பதை எடுத்துரைத்தார்கள். மகளிர் செயல்திறன் மிக்கவர்கள் என்று பல செய்திகளை அழகுற எடுத்துக் கூறினார். திருமதி ஊ.பர்வின் தந்தை பெரியார் அவர்கள் மகளிர் முன்னேற்றத்திற்காக பெரும்பணியாற்றியுள்ளார் என்றும் இந்தியாவின் வளர்ச்சிக்கு ஆண், பெண் இருவரும் இணைந்து ஒருமித்த கருத்தோடு செயல்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார். இவ்விழாவில் தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் இசைத்துறைத்தலைவர் பேரா. ஞானம்பிகை குலேந்திரனின் மணிவிழா மலரான ஞானகானம் என்னும் நூல் வெளியிடப்பட்டது. முன்னதாகச் சமூக அறிவியல் துறைத்தலைவர் பேரா.அரோமா கு சாம் வரவேற்புரையாற்றினார். தொடக்க நிகழ்ச்சியின் இறுதியில் கருத்தரங்க அமர்வு நடைபெற்றது. முனைவர் க.திலகவதி நன்றி கூறினார். பிற்பகல் 2.30 மணிக்குத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பணியாளர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. நிகழ்ச்சிகளை முனைவர் மா.பார்வதி தொகுத்து வழங்கினார்.

## தத்துவ மையம் - புத்தொளிப் பயிற்சி



பல்கலைக்கழக நல்கைக்குழுவின் உதவியுடன் தத்துவ மையம், 'தத்துவம், சமயம், பண்பாடு ஆகியனவற்றைக் கற்பிக்கும் முறைமைகளும் ஆய்வுச் செய்திறன் முறைகளும்' என்னும் பொருண்மையில் கல்லூரி ஆசிரியர்களுக்கான 21 நாள் புத்தொளிப் பயிற்சியினை 2003 பிப்ரவரித் திங்கள் 11ஆம் நாளிலிருந்து மார்ச்சுத் திங்கள் 3ஆம் நாள் வரை ஏற்பாடு செய்திருந்திருந்தது. இப் புத்தொளிப்பயிற்சி வகுப்பில் தமிழ்நாட்டின் பல்வேறு கல்லூரிகளிலிருந்து 18 கல்லூரி ஆசிரியர்கள் பங்கேற்றனர். பயிற்சியின் தொடக்கவிழா 11.02.03 அன்று முற்பகல் 10.30க்கு பல்கலைக்கழகப் புலவிருந்தகத்தில் நடைபெற்றது. புத்தொளிப் பயிற்சி வகுப்புகளைத் தொடங்கிவைத்து மதிப்புயர் துணைவேந்தரவர்கள் தொடக்க உரையாற்றினார். தொடக்கவுரையில், மாண்பமை துணைவேந்தரவர்கள் வேகமாக மாறிவரும் சமுதாயச் சூழலில் - அறிவியல் வளர்ச்சி வேகத்தில் தத்துவம், சமயம் மற்றும் பண்பாடு ஆகியவற்றை மாணவர்களுக்கு ஆசிரியர்கள் கற்பிக்கும் போது உரிய கற்பிக்கும் முறைமைகளில் மாற்றங்களைச் செய்து பாடங்கள் நடத்தினால்தான் மாணவர்கள் பயன்பெறுவர் என்றும், இன்றைய நாளில் வகுப்பறை என்பது நம் வீட்டின் வரவேற்பறைக்கு வந்துவிட்ட நிலையில் கல்லூரிகளில் மாணவர்களுக்கு வகுப்புகளில் பாடங்கள் நடத்தும் முறையில் புதிய முறைமைகளைப் பயன்படுத்த வேண்டுமெனவும் அதற்கு இந்தப் புத்தொளிப்பயிற்சி உதவுமென்றும் எடுத்துரைத்தார். பின்னர், தமிழ் இணையப் பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் டி.பி.சித்தலிங்கையா அவர்கள் மையக்கருத்துரை வழங்கினார்கள். மையக் கருத்துரையில் தத்துவம், சமயம், பண்பாடு ஆகியவற்றை இளைஞர்கள் கற்கவேண்டிய அவசியம் பற்றியும், தத்துவமும் சமயமும்தான் இந்தியப் பண்பாட்டின் ஆணிவேர்கள் என்றும், ஆனால் அவற்றை பழமையானவை எண்றெண்ணி அவற்றைக் கற்பிக்கும்முறைகளிலும் பழமையானவற்றைப் பின்பற்றுதல் தவறு என்றும் வேகமாக மாறிவரும் சமுதாயத்தில் ஆசிரியர்கள் துணிவுடன் தத்துவம், சமயம், பண்பாடு ஆகியனவற்றைப் புதுமையான முறையில் கற்பிக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

21 நாள்கள் நடைபெற்ற இப்புத்தொளிப்பயிற்சியில் 41 பேராசிரியப் பெருமக்கள் (தொடக்கவிழா, நிறைவுவிழாக்களைத் தவிர்த்து) 108 மணிநேரத்திற்கு வகுப்புகளை நடத்தினர். ஆய்வுச் செய்திறன் முறையில் நூலகத்தின் முக்கியத்தினை அனைவரும் அறிந்திருந்தாலும் இணையத்தின் மூலம் நூலகத்தினைப் பயன்படுத்தும் செய்முறை வகுப்புகளும் இப்பயிற்சியில் ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது. இறுதியில், நிறைவுநாள் நிகழ்ச்சியில் கல்லூரி மாணவர்களுக்கு இன்றைய தேவையான சமயநல்லிணக்கம் பற்றி எடுத்துக் கூறி நல்வழிப்படுத்தும் கடமை ஆசிரியர்களுக்கு உள்ளதால் சமய நல்லிணக்கம் பற்றி இந்து, கிறித்துவ, இசுலாமிய சமயத்தலைவர்கள் சிறப்புரையாற்றினார்கள்.

## அன்னபூரணி இராமநாதன் நினைவு அறிவியல்தமிழ் அறக்கட்டளைச் சொற்பொழிவு




அன்னபூரணி இராமநாதன் அறக்கட்டளைச் சொற்பொழிவு தமிழ்ப் பல்கலைக்கழக அறிவியல்தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில் 13-03-03 வியாழன் அன்று பல்கலைக்கழக மொழிப்புல அரங்கில் நடைபெற்றது.


வளர்தமிழ்ப் புலத் தலைவர் பேரா. முனைவர் அரோமா கு சாம் அவர்கள் தலைமை தாங்கினார். அவர் தம் தலைமையுரையில் அறிவியல்தமிழ் இன்றைய கால கட்டத்தில் மிகவும் தேவையான ஒன்று எனவும் சாதாரண மக்கள் நவீன அறிவியல் தொழில் நுட்பங்களை அறிந்துகொள்ள வேண்டுமெனவும் அறிவியல்தமிழ்த்துறை மருத்துவம், பொறியியல் பாடநூல்கள் பலவற்றை உருவாக்கியுள்ளது எனவும் குறிப்பிட்டார்.

தமிழக அரசின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தின் முன்னாள் பதிப்பாசிரியர் பேரா.இரா.மதிவாணன் அவர்கள் தமிழில் வேர்ச்சொற்களும் கலைச்சொல்லாக்கமும் என்னும் பொருண்மையில் சொற்பொழிவாற்றினார். தமிழ்மொழியின் வேர்ச்சொற்கள் இந்திய மொழிகள் அனைத்திலும் இடம்பெற்றுள்ளதைக் காணமுடிகிறது. மொழிக் கட்டமைப்பியல் என்னும் புதிய துறை மொழி பற்றிய கருத்தமைவுகளில் பல்வேறு மாற்றங்களை உருவாக்கி வருகின்றன. தமிழில் ஏராளமான சொல்வளம் காணப்படுகின்றது. வேர்ச்சொற்களைக் கொண்டு புதிது புதிதாகக் கலைச்சொற்களை உருவாக்கிக் கொள்ளலாம். அவ்வாறு கலைச்சொற்களை உருவாக்கும்போது தமிழின் இலக்கண விதிகளுக்குட்பட்டு செய்யவேண்டும். கிரேக்கம், எபிரேயம், சீனம், தமிழ் ஆகிய நான்கும் தொன்மை வாய்ந்த மொழிகளாகும். கலைச்சொல்லாக்கத்திற்குப் பிறமொழிச் சொற்களைக் கடன் வாங்கினாலும் அது தமிழ் வயப்பட்டதாக அமையவேண்டும். சிந்துவெளிக் குறியீடுகளுக்கும் தமிழ் எழுத்துக்களுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. மேலும் ஆய்வு செய்து தமிழின் சிறப்புகளை வெளிக்கொணரவேண்டும். இவ்வாறு பேரா இரா.மதிவாணன் சொற்பொழிவில் குறிப்பிட்டார்.

முன்னதாக அறிவியல்தமிழ் வளர்ச்சித்துறைத் தலைவர் பேரா முனைவர் கு.அண்ணாதுரை அனைவரையும் வரவேற்றார். முனைவர் பெ.துரைசாமி நன்றி கூறினார். இந்த அறக்கட்டளையை அறிவியல்தமிழ்த்துறையின் முன்னாள் பேராசிரியர் முனைவர் இராம.சுந்தரம் அவர்கள் தம் பெற்றோரின் நினைவாக நிறுவியுள்ளார்.

*-அறிவியல்தமிழ் மற்றும் தமிழ்வளர்ச்சித்துறை*

## தமிழ்நாடக மேடை வளர்த்த தமிழிசை




தமிழ்ப் பல்கலைக்கழக நாடகத்துறை சார்பில் பெருமள்ளர் மா.அருணாசலம்-பழனியாயி அறக்கட்டளை சார்பில், 12-03-03இல் தமிழ் நாடக மேடை வளர்த்த தமிழிசை என்னும் பொருளில் சொற்பொழிவு நடைபெற்றது. அறக்கட்டளைச் சொற்பொழிவினைத் தமிழ் நாடக மேதை அவ்வை டி.கே.சண்முகம் அவர்களின் புதல்வர் கலைமாமணி டி.கே.எஸ்,கலைவாணன் நிகழ்த்தினார். நிகழ்ச்சியில் வரவேற்புரை நிகழ்த்திய நாடகத்துறைத் தலைவர், முனைவர் க.இரவீந்திரன், பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வரைமுறையற்ற தரங்குறைந்த உரையாடல்களால் கலைஞர்கள் தமிழ் நாடக மேடையை நலிவுறச் செய்த நிலையை மாற்றுவதற்காகவே சங்கரதாசு சுவாமிகள் போன்றோர் தமிழிசைப் பாடல்களால் உரையாடல்களை உருவாக்கினர் எனவும் இதனால் தமிழ் நாடக மேடை புத்துயிர் பெற்றது எனவும் குறிப்பிட்டார். தலைமையுரையாற்றிய முன்னாள் இசைத்துறைப் பேராசிரியர் முனைவர் ஞானாம்பிகை குலேந்திரன் தமிழ் நாடக மேடைக்கும் தமிழிசைக்கும் உள்ள மரபு வழியான தொடர்பினை விளக்கினார். தமிழிசையின் வளர்ச்சியில் தமிழ்நாடக மேடை அரிய பங்களிப்பு செய்த விதத்தையும் விளக்கினார். முன்னிலை வகித்துப்பேசிய கலைப்புலத்தலைவர் முனைவர் இராசு.காளிதாசு பாகவத புராணம் தமிழனின் சொத்து எனவும் சிற்பம், நாடகம், இசை, ஓவியம் யாவும் ஒன்றோடொன்று இயைந்து வாழ்வனவென்றும் குறிப்பிட்டார்.


அறக்கட்டளைப் பொழிவினை நிகழ்த்திய தமிழிசைக் கலைஞர் டி.கே.எஸ்.கலைவாணன் தமிழிசைப் பாடல்கள் தமிழ் நாடக மேடையை ஆளுமை செய்த நிலையைத் தக்க சான்றுகளுடன் பாடி நிறுவினார். தமிழ்நாடகமேடையைத் தமிழ் இசை வளர்த்ததா? தமிழ் இசையை தமிழ் நாடக மேடை வளர்த்ததா? என்ற கேள்வியை எழுப்பி இரண்டும் ஒன்றையொன்று சார்ந்து வளர்ச்சி பெற்ற நிலையைச் சிறப்பாக விளக்கினார். தமிழிசைப் பாடல்களைப் பாடத்தெரிந்தவர்களே அன்றைய நடிகர்களாக விளங்கிய நிலையையும், உரையாடலை வெளிப்படுத்துவதற்காகவே இன்றைய நடிகர்கள் சிலருக்குப் பின்குரல் கலைஞர்கள் அமைந்துள்ள நிலையையும் வேதனையோடு கோடிட்டுக் காட்டினார். நாடகம் எனப்படுவது தமிழிசையோடு இயைந்து வாழ்ந்த நிலை மீண்டும் உருவாகவேண்டுமென்னும் வேட்கையை வெளிப்படுத்தினார். சங்கரதாசு சுவாமிகள் பாடல்கள் உள்ளிட்ட குறிப்பிடத்தக்க தமிழிசைப் பாடல்களை அழகாகப் பாடிக் காட்டி அரங்கில் திரளாகக் கூடியிருந்தோரை மெய்மறக்கச் செய்தார். நாடகத்துறை முனைவர் பட்ட ஆய்வாளர் க.வெங்கடரமணன் நன்றி கூறினார்.

இ.அ.ப. மட்டும் நூலஞ்சல்

திருமிகு: நிர்வாக அலுவலர் அவர்கள்
சரஸ்வதி மஹால் நூலகம்
தஞ்சாவூர்.

# தமிழ்ப் பல்கலைக் கழகம்
## தஞ்சாவூர்

### அயல்நாட்டுத் தமிழ்ச் சிறுகதைகள்



தமிழ்ப் பல்கலைக்கழக அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித்துறையின் சார்பில் அயல்நாட்டுத்தமிழ்ச்சிறுகதைகள் கருத்தரங்கம் தமிழ்ப் பல்கலைக்கழக மொழிப்புலக் கருத்தரங்க அறையில் 19-03-2003 அன்று நடைபெற்றது. அயல்நாட்டுத்தமிழ்க் கல்வித்துறைத் தலைவர் முனைவர் ஆ.கார்த்திகேயன் அனைவரையும் வரவேற்றார். தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் தலைமையேற்றார். அவர்தம் தலைமையுரையில், வெளிநாட்டின் சிறுகதைகள் அந்தந்த நாட்டின் கலைகள், பண்பாடுகளை மட்டுமின்றி வேற்று நாட்டுப் பண்பாடு, வரலாறு போன்றவற்றையும் வெளிப்படுத்துகின்றன. அவற்றை ஆய்வு செய்தால் மேலும் பல செய்திகளும் புதுமைகளும் கிடைக்கும் என்றார்.

மேலும் இக்கருத்தரங்கில் படிக்கப்பெற்ற கட்டுரைகளின் தொகுப்பான 'ஆய்வு நோக்கில் அயல்நாட்டுத்தமிழ்ச் சிறுகதைகள்' எனும் நூலினைத் துணைவேந்தர் அவர்கள் வெளியிட, ஸ்பாடிக்ஸ் மெட்ரிக்குலேசன் பள்ளித் தாளாளர் துரை.சந்திரசேகரன் அவர்கள் பெற்றுக்கொண்டார். ஆஸ்திரேலியா தமிழ் எழுத்தாளர் மாத்தளை சோமு அவர்கள் மையக்கருத்துரையை வழங்கினார். அவர்தம் உரையில், மலேசியா, சிங்கப்பூர் சென்ற தமிழர்கள் தங்களை இந்தியத் தமிழர்களாக நிறுவிக்கொண்டனர். அவர்களிடமிருந்து உலகத் தமிழ்ச்சிறுகதை இலக்கியம் உருவாகத் தொடங்கியது. கி.பி.1888இல் சிங்கப்பூரைச் சேர்ந்த மகுதூம் சாயபு என்பவர் விநோத சம்பாஷணை என்ற பெயரில் எழுதியதே தமிழின் முதல் சிறுகதையாகும். 1983ஆம் ஆண்டுக்குப்பிறகு பிழைப்புக்காக அயல்நாடுகளில் வசிக்கச் சென்ற ஈழத்தமிழர்களை அந்நியத்தன்மை தாக்கியது. இதனால் இவர்கள் தங்களது உணர்வுகளைக் கொட்டி எழுதியதால் வேகமும், வீச்சும், ஆழமும் இருக்கிறது என்றார். முடிவில் முனைவர் சா.உதயசூரியன் நன்றி கூறினார்.

### அறிவியல் தமிழ்வளர்ச்சித்துறை

23-03-03 அன்று தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக அறிவியல் தமிழ் வளர்ச்சித்துறையும், தமிழக அறிவியல் ஆசிரியர் மன்றமும் இணைந்து அறிவியல் தமிழ்க்கருத்தரங்கு ஒன்றை நடத்தியது. அன்றைய முற்பகல் அமர்வில் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் தலைமை தாங்கித் தமிழில் பொது அறிவியல் என்ற நூலை வெளியிட்டு, சிறப்புரையாற்றினார். அவர் தமது சிறப்புரையில் ஆய்வுக் கட்டுரையில் இடம்பெறும்நல்ல அறிவியல் கருத்துகள் காற்றில்கலந்து விடாமல் நூல்வடிவில் இடம் பெற்றதைப் பாராட்டினார். மேலும் அறிவியல் தமிழை வளர்ப்பதற்கும், புதிய சொல்லாக்கம் உருவாவதற்கும் இம்மாதிரியான கருத்தரங்குகள் உதவும் என்றும்கூறினார். அதனைத் தொடர்ந்து ஆய்வுக் கட்டுரைகள் படிக்கப்பட்டன. நாற்பத்திநான்கு கட்டுரைகள் இரண்டு அமர்வுகளாகப் படிக்கப்பட்டன. முதல் அமர்வு பேராசிரியர் பி.கண்ணையன், (முன்னைத் தமிழ்த் துறைத்தலைவர், பூண்டி புட்பம் கல்லூரி) அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இருபத்திஒன்று கட்டுரைகள் படித்து விவாதிக்கப்பட்டன. இரண்டாம் அமர்வு, பிற்பகல் 2.30 மணியளவில் குத்தாலம் நடராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதில் இருபத்திமூன்று கட்டுரைகள் படித்து விவாதிக்கப்பட்டன.

இரண்டு அமர்வுகளிலும் சூடான விவாதங்கள் அரங்கை மெருகூட்டின. பயனுள்ள கருத்துகள் பதிவு செய்யப்பட்டன. தஞ்சாவூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு முத்து.பழனிச்சாமி, பெரியார் மணியம்மை பொறியியற் கல்லூரி, வல்லம், முனைவர் கோ.மகாதேவன் மற்றும் பல அறிஞர் பெருமக்களும், அறிவியல் ஆசிரியர்களும் திரளாகக் கலந்து கொண்டு வினாக்களுக்கு விளக்கமளித்தனர். முன்னதாக, கருத்தரங்கு நிகழ்ச்சியில் தமிழ்ப் பல்கலைக்கழக அறிவியல் தமிழ் வளர்ச்சித் துறைத்தலைவர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் பேரா. கு.அண்ணாதுரை அவர்கள் கலைச்சொற்கள் உருவாகுகின்ற முறைகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கினார்.